# சமகால நடைமுறைக்கும் இஸ்லாத்திற்கும் அப்பாற்பட்ட பெண்பார்ப்புப் படலங்களும் முதிர்க்கன்னிகளின் அதிகரிப்பும்: இலங்கை காதி நீதிவான்கள், இளம் பெண்கள், பெற்றோர்களை மையப்படுத்திய பொது ஆய்வு

# Bride Watching Ceremonies beyond Contemporary Practice and Islam and the Proliferation of Mature Virgins: a common study based on Sri Lanka Quazi judges, Young Women and Parents

M.M.F. Samha[1], I.F. Ilma[2], M.N.S. Munsira[3] & M.A.F. Ashra[4]

[1,2]Department of Arabic Language, FIA, SEUSL
[3,4]Department of Islamic Studies, FIA, SEUSL
[1]samamirzook16@gmail.com, [2]ilmaisamdeen@gmail.com, [3]fathimamunsira7@gmail.com, ashrashraff@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமிய மார்க்கம் என்பது மனித வாழ்க்கைக்கும் நடைமுறைக்கும் சிறந்த மார்க்கம் என்பதனை இன்றைய உலகின் பெரும்பான்மை மதங்கள் ஏற்றுக் கொள்கின்றன. இஸ்லாமியனிடம் கற்றுக் கொள்ளும் பாடமும் இஸ்லாத்தில் கற்க வேண்டிய பாடமும் வித்தியாசமானவை என்று அண்ணிய மதங்களே உணர்த்தி விட்ட அளவுக்கு நம் முஸ்லிம்கள் பலரிடம் இஸ்லாம் கிடையாது. இஸ்லாத்தின் பார்வையில் திருமணம் என்பது அதிகம் வலியுறுத்தப்பட்ட ஒரு கடமையாகும். ஒரு மனிதனை பல தவறான வழிமுறைகளிலிருந்தும் பாதுகாக்க திருமணம் மனித வாழ்வில் இன்றியமையாததாகும். அவ்வாறான இரு உறவுகளின் இணைவு தகுந்த பொருத்தமானதாக அமைந்தால் தான் திருமணத்தின் நோக்கங்கள் பூரணமாகும். இந்த பூரணத்துவத்தின் முதற்கட்ட பணியாகத் தான் இஸ்லாம், திருமணம் முடிக்க முன்னர் மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதை அங்கீகரித்து வலியுறுத்துகின்றது. ஓர் நுண்ணிய நோக்கோடு இஸ்லாம் அனுமதித்த இப் பெண்பார்ப்புப் படலங்கள் பெரும்பாலும் நம்மவர்களால் இன்று தவறாக பயன்படுத்தப்படுவதனை அவதானிக்கிறோம். தரமும் திறமையும் புறக்கணிக்கப்பட்டு தகுதிக்கு மதிப்பளிக்கின்றனர். இதன் விளைவானது, பெண் தற்கொலைகள், அதிக விவாகரத்துக்கள், முதிர் கன்னிகள் அதிகரிப்பு எனப் பட்டியல் நீளும்… இவ்வாய்வு பல்கலைக்கழக மாணவியர்கள், பொதுமக்கள், இளம் பெண்கள், காதி நீதிவான்கள்(எழுமாறாக தெரிவு செய்யப்பட்டோர்) மையப்படுத்திய ஓர் ஆய்வாகும். முஸ்லிம் சமூகத்தில் ஒரு மனிதனின் வாழ்க்கையின் பாதியே சிதைக்கப்படும். இவ்வழிமுறைகளைக் கலைந்து அது மூலம் தனி மனிதன், குடும்பம், சமூகம் எதிர்கொள்கின்ற சவால்களை இனங்காணும் இவ்வாய்வுக்காக முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** பெண்பார்ப்புப் படலம், விவாகரத்துக்கள், முதிர்க்கன்னி, எதிர்மறை

## அறிமுகம்:

மனித வாழ்க்கையில் இன மத வேதங்கள் ஒற்றுமைப்படுகின்ற ஒரு வாழ்க்கையின் பிரதான அங்கம் திருமணம். எல்லா மதமும் திருமணத்தை அங்கீகரித்துள்ளன. பொதுவாக உலக

மதங்களைப் பொருத்தவரையிலும் பௌத்தர்கள் பிக்குகளையும், இந்துக்கள் சன்னியாசிகளையும், கிறிஸ்துவர்கள் பாதிரிமார்களையும் முக்கியத்துவப்படுத்தியுள்ள போதிலும் திருமணத்தையும் அங்கீகரித்துள்ளன. இஸ்லாமிய மார்க்கம் மட்டுமே துறவரத்தை வெறுத்து திருமணத்தை வலியுறுத்தும் ஒரு மார்க்கமாகக் காணப்படுகின்றது. எல்லா மதங்களும் சம்பிரதாயங்களால் திருமணத்தை பூரணப்படுத்திய போதிலும் இஸ்லாம் நடைமுறைக்கு ஏற்ற வழிமுறைகளால் பூரணப்படுத்துகின்றது. திருமணம் நிகழ முன் எல்லா மதங்களிலும் பெண்பார்ப்புப் படலங்கள் இன்றியமையாததாக காணப்படும். சிலரது வாழ்க்கையில் நிகழ்வாகவும் சம்பவமாகவும் இருக்கும் பலரது வாழ்க்கைக்கான ஆரம்பமாகவும் இருக்கும்.இலங்கை மதங்களில் பெண்பார்ப்புப் படலங்களை பொருத்தமட்டில் இஸ்லாம் தவிர்ந்த ஏனைய அனைத்து மதங்களும் பெரும்பாலும் பூப்புனித விழாக்களை சம்பிரதாயம் பேணிக் கொண்டாடுவார்கள். திருமணத்தை அவரவர்களின் விருப்பத்தில் விட்டுவிடுவார்கள். பலங்கால தமிழ் வழிமுறை சுயம்வர முறையாக இருந்தாலும் தற்போது சிலரிடத்தில் மட்டும் தான் பெண்பார்ப்பு இவையெல்லாம் கட்டாயமாகும். நூற்றில் பாதி காதல் திருமணங்களே. எனவே, இஸ்லாத்தில் வெறுமனே சம்பிரதாயம் போன்றல்லாது திருமணத்தின் ஒரு பகுதியாக பெண்பார்ப்புப் படலங்கள் காணப்படுகின்றன. எனவே, ஒவ்வொரு மணமக்களின் வாழ்க்கையிலும் இத்தருணம் ஒரு முக்கிய கட்டமாகும்.

இஸ்லாமிய மதத்தில் மணப் பெண்ணைத் தேர்வு செய்யும் போது அவள் ஒழுக்கமுடையவளாகவும், நல்ல குணமுடையவளாகவும் இருக்கின்றாளா என்பதையே கவனிக்க வேண்டும். ‘‘பொருளாதாரத்தையோ, குலப்பெருமையையோ, உடல் அழகையோ’’ பிரதானமாகக் கருதக் கூடாது என்று இஸ்லாம் கூறுகின்றது.மணமகளைத் தேர்வு செய்யும் போது பெண்களும் ‘‘ஆண்களின் நடத்தையையே ‘‘ பிரதானமாகக் கொள்ள வேண்டும். பெண்கள் அவர்களின் செல்வத்திற்காகவும் அவர்களின் அழகுக்காகவும் அவர்களின் பாரம்பரியத்திற்காகவும், அவர்களின் மார்க்க நன்னடத்தைக்காகவும் மணந்து கொள்ளப்படுகின்றனர். நீ மார்க்க நடத்தை உடையவளைத் தேர்வு செய்து வெற்றியடைந்து கொள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி)நூல் : புகாரி 5000இவற்றுள் செல்வமும் அழகும் நிரந்தரமானவையல்ல. குடும்பம், கௌரவம் என்பது இறையச்சம் (தக்வாவைப்) பொறுத்தது. எனவே, இந்த ஹதீஸ் மார்க்கப்பற்றுள்ள இறை பக்தியுள்ள பெண்ணை மணப்பதே சிறந்தது என்பதை வலியுறுத்துகிறது.

‘‘மார்க்கப்பற்றுள்ள பெண்ணைத் தேர்ந்தெடுப்பதால் அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதரும் கூறும் முறைப்படி வாழ்வாள். அவளது அழகு, செல்வம், பரம்பரை எல்லாம் இஸ்லாம் காட்டிய அடிப்படையில் அமையும். இறையச்சமுடையவளாகவும் இருப்பாள். கணவனுக்கேற்ற காரிகையாக விளங்குவாள். தன் பொறுப்புக்களை உணர்ந்தவளாக செயல்படுவாள்.’’‘உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். தமது பொறுப்பின் கீழ் உள்ளவர்களைப் பற்றி மறுமையில் ஒவ்வொருவரும் விசாரிக்கப்படுவீர்கள். ஒரு பெண் தன் கணவனின் வீட்டுக்கு பொறுப்பாளி ஆவாள். அவளிடம் தமது பொறுப்பில் உள்ளவர்களைப்

பற்றி விசாரிக்கப்படும்.' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)ஆதாரம் : புகாரி, முஸ்லிம்

ஆனால், இன்று சட்டங்களும் கோட்பாடுகளும் மறுக்கப்பட்டு பெண்பார்ப்புப் படலங்கள் என்ற பெயரில் அதிகமான முதிர்க்கன்னிகளை நம் சமூகம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. சரமாரியான விவாகரத்துகளுக்கு அடுக்கடுக்கான காரணங்கள் அடுக்கும் நம்மில் பலருக்கு ஆரம்பமே பிழை என்பது தெரிவதில்லை. 'பணம்' என்ற ஒற்றைச் சொல்லுக்காக வாய் நிரம்ப உண்டு விட்டு நா மறந்து மறுக்கப்படுகின்றன பல பெண்கள். கறுப்பின அடிமை ஆட்சியாளனானாலும் கட்டுப்படுங்கள் என்று போதித்த இஸ்லாத்தை சுமந்து கொண்டே நிறத்திற்கும் வடிவங்களுக்கும் முக்கியத்துவமளிக்கின்றனர். எனவே, திருமணம் என்ற பெயரில் பெண்களை அடிமைத்துவப்படுத்தக் கூடாது என்பதை மனித மனங்களில் விதைக்கவே இந்த ஆய்வு விளைகிறது. அதனடிப்படையில் இவ்வாய்வானது பின்வரும் மூன்று விடயங்களைக் கருத்திற் கொள்ளவுள்ளது. அவையாவன,

- விவாகரத்துக்கள் அதிகம் இடம்பெறுவதற்கு பொருத்தமற்ற தம்பதியர் இணைவும் ஒரு காரணம்.
- ஆண்கள் நிர்வகிக்கக்கூடியவர்கள் என்ற எண்ணக்கருக்கள் மூலம் பெண்களின் அதிக எதிர்பார்ப்புக்கள் பொருத்தமற்ற திருமணங்கள் மூலம் சிதைக்கப்படுகின்றன.
- முதிர்க்கன்னிகளையும் அதிகரிப்பை எவ்வாறு தவிர்த்தல்.

இவ்வாய்வானது சிங்களப் பெரும்பான்மை நாடான இலங்கையை மையப்படுத்தியுள்ளது. இதற்காக தகுதியான நேர்காணல்களும், பாதிக்கப்பட்டோரின் வாக்குமூலங்களும் கருத்திற்கொள்ளப்பட்டன.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை வாழ் முஸ்லிம் மக்களிடத்தில் இளம் பெண்கள் திருமண வயதை அடைந்தும் தகுதிகளால் புறக்கணிக்கப்படுவதையும், திருமண வயதைத் தாண்டியும் முதிரக்கன்னிகளாய் வருவதற்கும் பெண்பார்ப்புப் படலங்கள் மூலம் சாதாரணமாக நிராகரிக்கப்படுகின்றமையே காரணமாகும். இதனால், தனிமனிதன், குடும்பம், சமூகம் எதிர்நோக்கும் விளைவுகளையும், அதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் கண்டறிவது.

**ஆய்வு நோக்கம்**

முஸ்லிம்களுக்கு மத்தியில் பெருகி வரும் பெண்பார்ப்புப் படல நிராகரிப்புக்கள் பற்றிய இவ்வாய்வின் நோக்கம் பிரதானமாக இரண்டாக வரையறுக்கப்பட்டுள்ளன.

- முஸ்லிம்கள் மத்தியில் பெண்பார்ப்புப் படலங்களின் அசாதாரண நிராகரிப்புக்களுக்கான காரணங்களை கண்டறிந்து அதற்குரிய தீர்வுகளை முன்வைத்தல்.
- முதிர்க்கன்னிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

**ஆய்வு கருதுகோள்**

மேற்கூறப்பட்ட நோக்கங்கள் பின்வரும் கருதுகோள்கள் மூலம் பரீட்சிக்கப்பட்டன.


- விவாகரத்துக்கள் அதிகம் இடம்பெறுவதற்கு பொருத்தமற்ற தம்பதியர் இணைவும் ஒரு காரணமாகும்.
- ஆண்கள் நிர்வகிக்கக்கூடியவர்கள் என்ற எண்ணக்கருக்கள் மூலம் பெண்களின் அதிக எதிர்பார்ப்புக்கள் பொருத்தமற்ற திருமணங்கள் மூலம் சிதைக்கப்படுகின்றன.
- முறையற்ற பெண்பார்ப்புப் படலங்கள் மூலமும், தகுதியற்ற நிராகரிப்புக்கள் மூலமும் தனிதனித, குடும்ப, மானசீக, சமூக ரீதியாகவும் பெண்கள் தான் அதிகம் பாதிக்கப்படுவதோடு முதிர்க்கன்னிகளையும் அதிகம் சமுதாயத்தில் விதைக்கின்றனர்.


**ஆய்வு முறையியல்**


இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கிடையில் இஸ்லாமிய வரையறைகளை மீறிய பெண்பார்ப்புப் படலங்களும், திருமண முறைமைகளும் பெருகி வருவதால் விளைவுகள் அதிகரிக்கின்றமை தொடர்பான இவ்வாய்வானது பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளை பயன்படுத்திய விபரிப்பு பொது ஆய்வாக இடம்பெற்றுள்ளது. மேலும் இது கள ஆய்வாக இருப்பதனால் இவ்வாய்வினை நேர்த்தியாகப் பூரணப்படுத்தும் வகையில் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிறுபான்மை முஸ்லிம் சனத்தொகையைக் கொண்டுள்ள இலங்கையில், மாணவர்கள், பொதுமக்கள், விவாகப்பதிவாளர்கள், காதி நீதிவான்கள் போன்றோரை உள்வாங்கி வினாக்கொத்து மூலம் ஆய்வுத் தரவுகள் பெறப்பட்டன. இம்முதலாம் நிலைத் தரவுகள் சுமார் மூன்று நாட்கள் வரையறுக்கப்பட்டு 156 பூரணப்படுத்தப்பட்ட வினாக்கொத்துக்களை இணையவழி மூலம் பெற்றுக் கொண்டதோடு வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 32 முஸ்லிம் மாணவியர்களிடம் நேர்காணல் இடம்பெற்றன. மேலும் சுமார் 52 இளம் பெண்களின் பெற்றோர்களிடம் நேர்காணல் மூலமும் தகவல்கள் திரட்டப்பட்டன. இவ்வாய்வுக்கான கோட்பாடு அமைவுத்திட்டத்தை நிறுவுவதற்காக தலைப்பு சம்பந்தமான நூல்கள், இணையத்தள ஆக்கங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன மூலம் இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன.


**ஆய்வுப் பிரதேசம் - கலந்துரையாடலும், பெறுபேறுகளும்**


இலங்கை வாழ் முஸ்லிம்களிடையே பெண்பார்ப்புப் படலங்களில் 100 இல் 50 வீதமானவை தகுந்த காரணங்கள் இன்றி நிராகரிக்கப்படுகின்றன. மக்களிடையே பெறப்பட்ட தகவல்களின் படி, இலங்கை விவாக விவாகரத்துச் சட்டத்தின் ஓட்டைகளும் பல குற்றங்களுக்கான காரணம் தான் என்று மக்கள் முன்மொழிகின்றனர்.



இலங்கையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் பொருத்தமானதா?
36.80%
64.50%
ஆம்
இல்லை



இஸ்லாத்தில் ஆண் பெண் சமவுரிமை
40.50%
59.50%
ஆம்
இல்லை



இலங்கை விவாக விவாகரத்து சட்டம் முஸ்லிம்களுக்கான வரப்பிரசாதம்
18.40%
82%
ஆம்
இல்லை


இலங்கையில் திருமண வயதெல்லை 18 ஆக வரையறுக்கும் சட்டம்
35%
65%
பொருத்தமற்றது
பொருத்தமானது


பெண்பார்ப்புப் படலங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா?
16.50%
83.50%
ஆம்
இல்லை


தற்போதைய பெண்பார்ப்புப் படலங்களால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே?
13.90%
86.10%
ஆம்
இல்லை




இஸ்லாத்தில் திருமணத்திற்கு முன்னர் ஒரு ஆண் ஒரு பெண்ணை ஒரு முறை பார்த்துக் கொள்வதை வலியுறுத்தப்பட்டமைக்கான காரணங்கள்

- பிற்பட்ட தவறுகளைக் களைதல்
- பொருத்தமற்ற திருமண இணைவுகளை தவிர்த்தல்.
- இருவருக்கிடையிலான எதிர்பார்ப்புக்களை பரிமாற வாய்ப்பளித்தல்.
- பெண்களும் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்த சமவுரிமை.
- சிறந்த புரிந்துணர்வு கொண்ட தாம்பத்தியர் உருவாக்கம்.
- பேண்களையும் இஸ்லாம கண்ணியப்படுத்துகின்றமைக்கு ஓர் அடையாளம்.

தற்போதைய பெண்கள் பெண் பார்த்த பின்னரும் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள்.

- பொருளாதாரம்
- நிறம்
- கல்வித் தகைமை
- சீதனம்
- உடல்நிலை, கோளாறுகள்
- குடும்பப் பின்னணி
- உடலமைப்பு (மெலிவு)
- இருவருக்கிடையிலான எதிர்பார்ப்புக்கள் வித்தியாசமானவை
- இறந்த கால வாழ்க்கை
- ஊர்களுக்கிடையிலான தூரம்
- தன் சொந்த விருப்பத்தை ஊராரின் விருப்பத்திற்காக மாற்றல்.
- பொய்
- ஒருவர் இன்னொருவர் மீது கொண்டுள்ள பொறாமை உணர்வு
- நம்பிக்கையின்மை
- சந்தேகம்

திருமண முறிவுகளாலும் பெண்பார்ப்பு நிராகரிப்புக்களாலும் இளம் பெண்கள், பெற்றோர்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள்.

- உள ரீதியானவை – மன உளைச்சல்

  சளிப்புத்தன்மை

  வெறுப்பு

  நம்பிக்கை இழப்பு

- உடல் ரீதியானவை – முதிர்ச்சி

  ஆரோக்கியக்குறைவு

  நோய்களை எதிர்கொள்ளல்

  தற்கொலைகள்

**விதந்துரைப்புக்களும் முடிவுரையும்**

எதிர்மறை எண்ணங்கள் கொண்ட குழந்தைகள் கொண்ட சமுதாயம் ஆரோக்கியமானதாக இருக்க வாய்ப்பில்லை. பல வெற்றிகரமான சாதனை மனிதர்களின் இல்லற வாழ்க்கை அமைதியானதாக இருப்பதில்லை. சிங்களப் பெரும்பான்மை கொண்ட இந்த இலங்கையில் இஸ்லாமும் இஸ்லாமியனும் வாழ்வதற்கான சிறந்த அத்தாட்சி தான் முஸ்லிம்களுக்கான விவாக விவாகரத்து தனியார் சட்டம் ஆகும். வெளிப்படையான ஒரு சில விடயங்களில் அரசியல் தனிப்பட்ட அழுத்தங்களால் சில விடயங்களுக்கு தடை இட்டாலும், இலங்கை சகல மதங்களுக்கும் மதிப்பளிக்கும் ஒரு நாடு என்பதில் அச்சமில்லை. மதஸ்தலங்கள், போதனை நிலையங்களும், தனித்தனி தலைமை மன்றங்களும் பல வருடங்கள் கடந்து இன்னும் இந்நாட்டில் உயிர் வாழ்கின்றன. நமது பொடுபோக்குகளால் அரசாங்கத்தினை குறை சொல்ல முடியாது. அவ்வாறே திருமணம் முதற்கொண்டு தனிமனித வாழ்க்கை முறையிலும் தனிச்சுதந்திரத்தை இஸ்லாமும் இலங்கையும் தாராளமாக வழங்கியுள்ளன. அப்படி இருக்க சட்டத்தை நமது வசதிக்கேற்ப பயன்படுத்துவதால் பல உன்னதமான வழி முறைகளைக் கொச்சைப்படுத்துவது நம் தவறு தான். இவற்றில் திருமணம், பெண்பார்ப்புப் படலம் எல்லாம் உள்வாங்கப்படுகின்றன. பெண்பார்ப்புப் படலங்கள் மூலம் முறையான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களுக்காக பெண்கள் நிராகரிக்கப்படுவது வாஸ்தவம் தான். ஆனால், பெண்களுக்குள்ளும் ஒரு மனம் இருக்கின்றது என்பதை மதிப்பதேயில்லை. எல்லா ஆண்களும் நிலத்திற்கும் நிறத்திற்கும் பின்னால் வரிசையாக நின்றால் ஏனைய பெண்களின் கதி என்ன?

தங்களுடைய இளமையும் வயதும் போன பிறகும் மணமாகாதிருக்கின்ற ஆண்களும் பெண்களும் (முதிர்க் கன்னிகள்) இந்தப் பிரிவில் அடங்குகின்றனர். வயதாகியும் திருமணமாகாத ஆண்களை பிரம்மச்சாரிகள் (Bachelor) என்று சொல்ல முடியாது. அவர்களை திருமணமாகாதவர்கள் (Un married) என்றே சொல்ல வேண்டும். இவர்களை 'மிஸோகமிஸ்ட்' (Misogamist) & திருமண வெறுப்பாளர்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் இவர்களில் பெரும்பான்மையானோர் வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வு காரணமாகவும், வசதியின்மை காரணமாகவும் வாய்ப்பிழந்தவர்கள் மற்றும் வாய்ப்பை தவற விட்டவர்கள். ஆண்டுகள் செல்லச் செல்ல வாழ்க்கையில் பிடிப்பற்று, உற்சாகம் குன்றி, தனிமைப்பட்டு

போகின்ற இவர்கள், தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர் வட்டத்தில் ஒவ்வொரு பெண்ணும் ஆணும் திருமணம் முடிக்கின்றபோது பெரிதும் மனவேதனைக்கு ஆளாகின்றனர். தங்களுக்கு திருமணத்தில் விருப்பமில்லை என்று சிலர் கூறுகின்றனர். தங்கள் பெற்றோரையும் சுற்றத்தாரையும் குறை கூறி குற்றம் சுமத்துகின்றனர் சிலர். தங்களைப் படைத்த ஆண்டவன் தான் இதற்கு காரணம் என்று கூறுகின்றனர். பெற்றோரிடமும், உறவினர்களிடமும் கோபத்தை வெளிப்படுத்தும் இவர்கள் பல நேரங்களில் தங்களை தாங்களே நொந்து கொள்கின்றனர். தங்களிடம் அன்பு காட்டவும், அரவணைக்கவும், ஆதரிக்கவும், பாதுகாக்கவும், இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்ளவும், பாலுறவில் பங்கு கொள்ளவும் ஒரு துணை இல்லையே என ஏங்கி தவிக்கின்றனர். இந்த ஏக்கத்தை போக்க வாழ்க்கை துணையை தேடிக் கொள்வது தான் நல்லது. நடைமுறையில் சாத்தியமானதும் கூட காலம் கடந்து திருணம் செய்து கொள்கின்றபோது சில கனவுகளையும் பல எதிர்பார்ப்புக்களையும் விட்டுக் கொடுத்தே தீர வேண்டும். கிடைத்ததை விரும்பும் மனப்பக்குவத்தை பெற்றிருக்க வேண்டும்.

நம் கண்களுக்கு புலப்படாமல் போனாலும் பல ஆண்களும் முதிர்க்கன்னிகளாக இருக்கின்றனர். காரணம், அவர்களின் தேவையும், பெண்களின் தேடலும் முரண்படுகின்றமையால் ‘நாங்களும் ஆண்களைப் போன்றே தைரியமாக தகுந்த காரணங்கள் கொண்டு நிராகரிக்கத் தொடங்கிவிட்டால் நம் சமூகத்தின் நிலைமை என்ன?’ என்று பெண்கள் தைரியமாகக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். இதற்கான பரிந்துரைகளையும் அவர்கள் மூலமே பட்டியல் படுத்தலாம்.

- ஆண்கள் பெண்களைப் பார்க்க முன்னர் பெண்களைப் பற்றிய முழு விபரங்களையும் அறிந்து ஒரு தரம் பெண்ணின் புகைப்படத்தினை பார்த்த பின்னரே பெண்ணை நேரடியாகப் பார்க்கச் செல்லல்.
- ஆணின் குடும்ப நபர்கள் முதலில் பெண்ணை ஒரு தரம் பார்த்துக் கொள்வது சிறந்தது.
- பெண்பார்த்தல் என்ற பெயரில் வீண் அலங்காரம், ஆடம்பரங்களைக் குறைத்தால் நிராகரிக்கப்படும் தருணத்தில் நஷ்டங்கள் குறைவாக இருக்கும்.
- பெண்பார்ப்புப் படலம் என்ற பெயரில் பொழுது போக்காக பின்பற்றும் பழக்கமுடையவர்களுக்கு மான நஷ்ட ஈட்டு முறை தண்டனையை அமுலுக்கு கொண்டு வரல் வேண்டும்.
- வெள்ளி மேடைகளில் இடை இடையே விழிப்புணர்வினை வழங்கல்.
- கட்டாயம் மணம் முடிப்பதினால் மாத்திரம் பெண் பார்க்க பெற்றோர் அனுமதிக்க வேண்டும்.
- பெண்களும் ஆண்களைப் போன்று சமவுரிமை உடையவர்கள் என்பதால் தமது விருப்பு வெறுப்புக்களையும் எதிர்பார்ப்புக்களையும் அவசியம் முன்வைக்க வேண்டும்.
- பெண்களின் திருமண வயதை 18 ஆகவோ அதற்கு மேலாகவோ வரையறை செய்வதன் மூலம் இளம் திருமணங்களையும் எதிர்மறை விவாகரத்துக்களையும் தவிர்க்கலாம்.
- எல்லாப் பெண்களும் தமக்கென தனிச் சிறப்புடைய திறமை உடையவர்களே, சில திறமைகளை அடிப்படையாகப் பெற்ற அவர்கள் பலவற்றை வாழ்க்கையின் போக்கிலிருந்து கற்றுக் கொள்கின்றனர். எனவே, அவர்களின் திறமைகளுக்கு மதிப்பளியுங்கள்.

- பெண்களைப் பெற்றவர்களும் ஆண் மகனைப் பற்றி சரியான தகவல் அறிந்த பின்னரே, பெண்ணைக் காட்டவோ, புகைப்படங்களை அனுப்பவோ எத்தனிக்க வேண்டும்.
- பேற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளின் விருப்பத்தையும் ஆலோசனைகளையும் அவசியம் அறிவதோடு அவர்களது நியாயமான எதிர்பார்புக்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும்
- பிள்ளைகளை தமது வாழ்கைத் தேர்வில் வற்புறுத்தக்கூடாது
- முதிர்க்கன்னிகளை சமூகம் மதிக்க வேண்டும், அவர்களை புண்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்
- பொருத்தமற்ற காரணங்களுக்காக விவாகரத்துக்கள் கோருவதை தவிர்க்க வேண்டும்
- காதி நீதிமன்றங்களின் சட்டங்கள் மீள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும்

## உசாத்துணைகள்


Safanagul begam, (2015) *Is equal justice possible a review of Srilanka's muslim marriage and divorce act and its implementation*, Colombo: Islamic womens association for research and empowerment

பௌஸுல் எம்.பி. (2015). *இலங்கை முஸ்லிம்களிடையே பெறுகியுள்ள விவாகரத்தும் சமூகக் கட்டமைப்பில் அதன் தாக்கங்களும்.* உண்மை உதயம் : பரகஹதெனிய ஜம்மியதுல் அன்ஸாரிஸ் ஸுன்னதுல் முஹம்மதியா.

ஹஸனா சே.இ (2015), இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சம நீதி முஸ்லம் விவாகம், விவாகரத்துச் சட்டமும் இஸ்லாமிய சட்டமும்: கொழும்பு, இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்

காதி நீதிமன்றம், 2013-2017 க்கான மாதாந்த அறிக்கைகள், பேருவளை

பவாஸ் ரௌஸ்தீன், முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்து வரும் விவாகரத்து காரணிகள் விளைவுகள் பற்றிய ஓர் எடுத்துரைப்பு, Retrieve from: www.google.com November 1st 2020

இலங்கை விவாகரத்துச் சட்டம், திருமணத்தீர்வுகள், Retrieve from: www.thazal.com September 25th 2020

இலங்கையில் தினமும் 300 பேர் விவாகரத்து, 23-09-2011, Retrieved From: www.old.globaltamilnews.com November 3rd 2020

அதிகபடியான விவாகரத்து இடம் பெறும் நகரமான கொழும்பு, newmuthur, Thursday, 07-03-2013,Retrieved from: www.newmuthur.com October 20th 2020

முஸ்லிம் தனியார் சட்டம் (Muslim personal law) 30-11-2011, Retrieved from: www.groups.google.com November 1st 2020

சண்முகசுந்தரம்.ஆர், புதினங்களில் திருமணச் சிக்கல், 13-04-2020, Retrieved from : https://vjpremalatha.blogspot.com Occtober 20th 2020

புத்த திருமண வழக்கங்கள், கம்ளீட் கைட், 24-01-2018, Retrieved from: jodilogic.com October 20th 2020

அசோக்.ஸி.ர் இந்து மதத்தில் உள்ள எட்டு வகையான திருமணங்கள், 10-05-2014, Retrieved from : https://tamil.boldsky.com October 10th 2020

திருமணம், திருவருட்சாதனங்கள் பற்றி திருச்சபை சட்டநூலின் படிப்பினைகள், Retrieved from : https://arulkadal.com October 28th 2020

ஜௌஸான் அஹ்மத், இஸ்லாமிய திருமணம், Jawsan.S.Muslim Express media.lk, 30-01-2019, Retrieved from : https://jawsan.home.blog October 15th 2020

வாழ்க்கையைத் தவறவிடும் முதிர் கன்னிகள், 29.06.2014, Retrieved from : https://www.tamilcnn.lk/archives/292570.html October 20th 2020